# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2092/14 – 2018 ඔක්තෝබර් මස 08 වැනි සඳුදා – 2018.10.08

*2092/14 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் (திருத்த) நியதிச்சட்டத்தின் நகல்

ஊவா மாகாணத்தின் மாகாண சபையில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி நியதிச்சட்டத்தின் நகலை பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக வெளியிடுகின்றேன்.

இந்த அறிவித்தல் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 10 தினங்களுக்கு பின்னர் இந்தியதிச் சட்டத்தின் நகலை அனுமதிக்காக ஊவா மாகாகணத்தின் மாகாண சபைக்கு முன்வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நியதிச்சட்ட நகலில் உள்ளடக் கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஏதேனுமொரு கருத்துக்களை முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதென்றால் இவ்விளம்பரம் வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து 10 நாட்களுக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு கடிதம் மூலம் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பாலகே சாலிய சுமேத சில்வா,
ஊவா மாகாணத்தின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார,
சுற்றுலா, போக்குவரத்து, கலாசார, நெசவுக் கைத்தொழில் மற்றும்
சிறு கைத்தொழில் அமைச்சர்,
ஊவா மாகாண மாகாண சபை,
பதுளை.

ஊவா மாகாணத்தின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார,
சுற்றுலா, போக்குவரத்து, கலாசார, நெசவுக் கைத்தொழில் மற்றும்
சிறு கைத்தொழில் அமைச்சு,
ஊவா மாகாண மாகாண சபை, பதுளை,
2018, செத்தெம்பர் 26.

**ஊவா மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் (திருத்த) நியதிச்சட்டம்**

ஊவா மாகாண மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை நியதிச் சட்டத்தை திருத்துவதற்கென விதிக்கப்பட்ட நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயரும் நடைமுறைத் திகதியும்.

1. இந் நியதிச் சட்டத்தை ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை (திருத்த) நியதிச் சட்டமென அறிமுகப்படுத்தப்படுவதோடு ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் அமுலிலிருக்கும்.

பிரதான நியதிச் சட்டத்தின் முன்னுரையை திருத்தம் செய்தல்.

2. இங்கு இனிவரும் காலங்களில் பிரதான நியதிச்சட்டம் என அறிமுகப்படுத்தும் ஊவா மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை நியதிச் சட்ட முன்னுரையில் ''பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை'' எனும் சொல்லுக்கு பதிலாக '' வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை'' எனும் சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டதின் முதலாம் பகுதியின் தலைப்பை திருத்தம் செய்தல்.

3. பிரதான நியதிச் சட்டத்தில் 1 ஆம் பகுதி '' ஊவா மாகாணத்திற்காக பயணிகள் போக்குவரத்து அதிகார சபையை தாபித்தல்'' எனும் சொற்களுக்கு பதிலாக '' மாகாணத்திற்காக வீதி போக்குவரத்து அதிகார சபையை தாபித்தல்'' எனும் சொற்களை உட்படுத்தி இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 3 ஆம் சரத்தை திருத்தம் செய்தல்.

4. பிரதான நியதிச்சட்டத்தின் 3 ஆம் பகுதியின் '' பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை'' எனும் சொற்களுக்கு பதிலாக ''வீதிப் போக்குரத்து சேவைகள் அதிகார சபை'' எனும் சொற்களை உட்படுத்தி அச்சரத்தை இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (அ) சரத்தை திருத்தம் செய்தல்.

5. பிரதான நியதிச்சட்டத்தின் 6 (அ) சரத்தின் '' பதினொரு அங்கத்தவர்களை கொண்டதாக'' எனும் சொற்களுக்கு பதிலாக ''பதிமூன்று அங்கத்தவர்கள்'' எனவும் அவர்களுள் ''ஐவர் உத்தியோகபூர்வ அங்கத்தவர்கள்'' எனும் சொற்களுக்கு பதிலாக ''ஆறு அங்கத்தவர்கள் உத்தியோகபூர்வ அதிகாரம் பெற்ற அங்கர்தவர்கள் '' எனவும் ''அறுவர் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்கள்'' எனவும், எனும் சொற்களுக்கு பதிலாக ''ஏழு அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்கள்'' எனும் சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (இ) (1) (2) சரத்தை திருத்தம் செய்தல்.

6. பிரதான நியதிச்சட்டத்தின் 6 (இ) (1) (2) சரத்துகளில் ''பயணிகள் போக்குவரத்து'' எனும் சொற்களுக்கு பதிலாக ''போக்குவரத்து'' எனும் சொல்லை உட்படுத்தி இவ் உபசரத்து திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (இ) (6) புதிய உப சரத்தை உட் படுத்தல்.

7. பிரதான நியதிச்சட்டத்தின் 6 (இ) (5) ஆம் உபசரத்தை தவிர கீழ்க் குறிப்பிடப்படும் புதிய உபசரத்தை உட்படுத்தப்படுவதுடன் அதுவானது 6 (இ) (6) உபசரத்து என அமுலில் இருத்தல் வேண்டும்.

''6 (இ) (6) மோட்டார் வாகன பரிசோதகர்''.

பிரதான நியதிச் சட்டத்தின் 6 (ஊ) (1) சரத்தை திருத்தம் செய்தல்.

8. பிரதான நியதிச் சட்டத்தின் (6) (ஊ) (1) ஆம் சரத்தின் ''மூன்று நபர்கள்'' எனும் சொற்களுக்கு பதிலாக ''இரு நபர்கள்'' எனும் சொற்களை உட்படுத்தி அவ் உப பந்தி இத்தால் திருத்தப்படுகின்றது.

9. பிரதான நியதிச்சட்டத்தின் 6 (உ) (3) பிரிவை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் சரத்து உட்படுத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 6 (உ) 3 ஆம் சரத்தை திருத்துதல்.*

"ஊவா மாகாண போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை வீதி அனுமதிப்பத்திர உரிமையாளர்களுள் இருவர்"

10. பிரதான நியதிச்சட்டத்தின் 6 (உ) (4) (அ) (I) (II) உப பிரிவை இரத்துச் செய்து அதற்கு பதிலாக கீழ் குறிப்பிடப்படும் உப சரத்து உட்படுத்தப்படுவதோடு, அதுவானது பிரதான நியதிச் சட்டத்தின் 6 (உ) (4) (அ) என அமுலில் இருத்தல் வேண்டும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் 6 (ஊ) (4) (அ) (I) (II) உப சரத்துக்களை திருத்துதல்.*

"6 (உ) (4) (அ) இலங்கை போக்குவரத்து அதிகாரசபையின் பிராந்திய உத்தியோகத்தர் ஒருவர்".

11. பிரதான நியதிச் சட்டத்தின் " அதிகாரசபை அங்கத்தவர்களுக்கிடையில்" எனும் சொற்களுக்கு பதிலாக "அதிகார சபை பணிப்பாளர் குழு அங்கத்தவர்களுக்கிடையில்" எனும் சொற்களை உட்படுத்தி திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 11 (அ) புதிய உபசரத்தை உட்படுத்தல்.*

12. பிரதான நியதிச்சட்டத்தின் 11ஆம் சரத்தின் பின்பு கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்து இத்தால் உட்படுத்தப்படுவதுடன் அதுவானது பிரதான நியதிச்சட்டத்தில் 11 (அ) உபசரத்து அமுலில் இருத்தல் வேண்டும். 1" 11 (அ) தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் குழு மூன்று கூட்ட அமர்வுகளில் அறிவிப்பு இன்றி வருகை தராமையால் பதவிக் காலம் நிறைவு பெறும்.

13. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (அ) உப பிரிவை இரத்துச் செய்து கீழுள்ள உப சரத்து உட்படுத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தில் 19 (அ) பிரிவிற்கு இடமளித்தல்.*

"ஊவா மாகாணத்திற்குள்ளேயும், ஊவா மாகாணத்துடன் இணைந்து பயணிகள் மற்றும் பொருட்கள் ஏற்றிச் செல்லும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தரமான போக்குவரத்து சேவையை நடாத்திச் சென்று அது பற்றி கவனம் செலுத்துதல் ஆய்வு செய்தல் அந்தந்த சேவைகளுக்கு ஏற்ப தரங்களை விதித்தல்".

14. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (இ) உபசரத்தை இரத்துச் செய்து கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்து உட்படுத் தப்படும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் 19 (இ) சரத்திற்கு இடமளித்தல்.*

"வெவ்வேறு கட்டணங்கள் மீது பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக வாகனமொன்றை ஈடுபடுத்துவது தொடர்பாக எவரேனும் ஒரு நபருக்கு அல்லது ஏதேனும் நிறுவனமொன்றுக்கு அதிகாரம் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்று அல்லது அது போன்ற வேறு அதிகாரப் பத்திரமொன்றை வெளியிடுதல், புதுப்பித்தல், திருத்துதல் மற்றும் இரத்துச் செய்தல் பற்றி நிபந்தனை விதித்தல்.

15. பிரதான நியதிச்சட்டத்தின் 19 (ஈ) ஆம் உப சரத்தின் "(3) ஆம் உப சரத்தில்" எனும் சொற்களுக்கு பதிலாக "(இ) உபசரத்தின்" எனும் சொற்களை உட்படுத்தி அப்பிரிவு திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஈ) பிரிவை திருத்தம் செய்தல்.*

16. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (உ) உப சரத்தின் "பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரதாரரான ஒருவருக்கு" எனும் சொற்களுக்கு பதிலாக "வீதிப்போக்குவரத்து சேவைகள் அதிகார சபை அனுமதிப்பத்திதாரரான ஒருவருக்கு" எனும் சொற்களை உட்படுத்தி, இச் சரத்து திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 19 (உ) சரத்தை திருத்தம் செய்தல்.*

17. பிரதான நியதிச் சட்டத்தின் 19 (உ) உப சரத்தில் "பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்கு" எனும் சொற்களுக்கு பதிலாக "வீதிப் போக்குவரத்து அதிகார சபை அனுமதிப்பத்திரங்களுக்கு" எனும் சொற்களை உட்படுத்தி இது திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 19(உ) சரத்தை திருத்தம் செய்தல்*

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஊ) சரத்தை திருத்தம் செய்தல்.

18. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (ஏ) உபசரத்தின் "பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமொன்றின் அதிகார சபையின் கீழ் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பேருந்து ஒன்றில் " எனும் சொற்களுக்கு பதிலாக " வீதிப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமொன்றில் அல்லது அனுமதிப்பத்திர அதிகார சபையின் கீழ் வீதிப் போக்குவரத்து சேவையில் ஈடுபத்தப்படும் வாகனமொன்றில்" எனும் சொற்களை உட்படுத்தி திருத்தப்படுகின்றது.

நியதிச் சட்டத் தில் 19 (எ) சரத்தை திருத்தம் செய்தல்.

19. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (ஏ) உபசரத்தின் " பயணிகள் சேவை அனுமதிப்பத்திர அதிகார சபை சேவையின் கீழ், பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துக்களில் சாரதிகளும் நடத்து நர்களும்" எனும் சொற்களுக்குப் பதிலாக " வீதிப் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரமொன்று அல்லது அதிகாரப்பத்திரமொன்றின் கீழ், பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனமொன்றில் சாரதிகள் நடத்துநர்கள் உதவியாளர்கள் " எனும் சொற்களை உட்படுத்தி அச்சரத்து திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ஐ) (ஓ) உபசரத்தை திருத்தம் செய்தல்.

20. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (ஐ) (ஓ) உப பிரிவுகளில் " பயணிகள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப் பத்திரமொன்றில்" எனும் சொற்களுக்குப் பதிலாக " பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரப் பத்திரமொன்று" எனும் சொற்களை உட்படுத்தி அவ் உபசரத்து திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் (ஔ) சரத்திற்கு இடமளித்தல்.

21. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (ஒ) உபசரத்து நீக்கப்பட்டு கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்து இணைக்கப்படு கின்றது.

" இந் நியதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வீதிப் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திர உரிமையாளர் ஒருவரால் அவ் அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் வீதிப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனமொன்றில் சாரதி உதவியாளர்கள் பேருந்து நடத்துநர்களாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற நபர்கள் தொடர்பாகவும் அந்த நபருடைய சேவையை ஆரம்பிக்கின்ற மற்றும் நிறைவு செய்கின்ற நேரங்கள் தொடர்பாகவும் வைக்க வேண்டிய அல்லது நடாத்திச் செல்ல வேண்டிய அல்லது அதிகார சபையில் சமர்ப்பிக்கக் கூடிய அறிக்கைகளை விதித்தல்.

22. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (ண) உபசரத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வரும் உபபிரிவை சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுவதுடன் பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ண) (I) மற்றும் 19 (ண) (II) உபசரத்துகளாக அமுலில் இருத்தல் வேண்டும்.

"19 (ண) (I) வீதிப் போக்குவரத்து சேவைகள் உரிமையாளர்களுடைய சேவைகள் உரிமையாளர்களுடைய சங்கங்களை பதிவு செய்தல், பங்களிப்பை மேம்படுத்தல் நிபந்தனைகளை விதித்தல், அவற்றுக்கு ஆலோசனை மற்றும் பொருத்தமானதென கருதப்படும் உதவிகளை வழங்குதல் சேவைகள் வழங்குதல் மற்றும் நலன்புறி வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.

"19 (ண) (II) வீதிப் போக்குவரத்து சேவைகளை நிர்வகித்தல், முறைப்படுத்தல், தர உள்ளீட்டை மேம்படுத்துவதற்காக சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், நிபந்தனைகள் விதித்தல், ஆலோசனை வழங்குதல், பொருத்தமானதென கருதப்படும் நலன்புரி வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.

நியதிச்சட்டத்தில் 19 (த) II உப சரத்தை திருத்தம் செய்தல்.

23. பிரதான நியதிச்சட்டத்தில் 19 (த) (II) உபசரத்தில் "பயணிகள் போக்குவரத்திற்கு" எனும் சொற்களுக்கு பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைக்கு" எனும் சொற்களை உட்படுத்தி அப் பிரிவு திருத்தப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) (III) உபசரத்தை புதிதாக இணைத்தல்.

24. பிரதான நியதிச்சட்டத்தில் 19 ஆம் சரத்தில் (த) II ஆம் உபசரத்திற்கு பின்னர் கீழ்க் குறிப்பிடப்படும் புதிய உபசரத்தை உட்படுத்தப்படுவதோடு அதுவானது பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) III உப சரத்திற்காக அமுலில் இருத்தல் வேண்டும்.

'19 (து) (III) அனைத்து போக்கவரத்து சேவை வழங்கநர்கள் மற்றும் சேவை பெறுனர்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பில் ஏற்படுகின்ற சிக்கல்களை தீர்ப்பதற்காக தீர்வுக் குழு ஒன்றை (விசாரணைக் குழு) தாபித்தல் வேண்டும்.

25. பிரதான நியதிச் சட்டத்தில் 19 (து) உபசரத்தை நீக்கி கீழ்க் குறிப்பிடப்படும் உபசரத்தை உட்படுத்தப் படுவதோடு அதுவானது பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) ( I) 19 (த) (II ) உப சரத்தாக அமுலில் இருத்தல் வேண்டும்.

*பிரதான நியதிச் சட்டத்தில் 19 (த) உபசரத்திற்கு இடமளித்தல்.*

"19 (த) III அனைத்து வீதிப் போக்குவரத்து சேவை பெருநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள், அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையாளர்கள் பற்றி ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து வைத்துக்கொள்வதற்காக தீர்வுக்குழு (விசாரணைக் குழு) ஒன்றை தாபித்தல் வேண்டும்.

"19 (த) I பயணிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களில் சேவையாற்றும் சாரதிகள் நடத்துநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ஏற்றவாறு :-

(1) சேவை உரிமைகள்;
(2) தொழில் சார்ந்த திறமைக்கான வசதிகளும் தரமும்;
(3) சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோது பின்பற்ற வேண்டிய ஒழுக்கம், மரியாதை மற்றும்,
(4) சேவையில் ஈடுபட்டுள்ளபோது பின்பற்ற வேண்டிய சீருடைகள் சின்னங்கள் குறியீடுகளை முறைப்படுத்துவதற்கான நிபந்தனைகளை விதித்தல்.

"19 (ழ) III வீதிப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வாகன சாரதிகள் பேருந்து நடத்துநர்கள் மற்றும் உதவியாளர்களுக்காக தொழில் பயிற்சி நிறுவனமொன்றை அதிகார சபையால் ஆரம்பித்தல் வழிநடாத்தல், மேம்படுத்தல்.

*பிரதான நியதிச் சட்டத்தில் 19 ஊ சரத்தை புதிதாக இணைத்தல்.*

26. பிரதான நியதிச்சட்டதில் 19 (ல) உபசரத்தின் பின்பு கீழ்க் குறிப்பிடப்படும் புதிய உபசரத்தை இத்தால் உட்படுத்தப்படுவதோடு அதனை பிரதான நியதிச் சட்டத்தின் 19 (ல) உப சரத்திறக்காக அமுலில் இருத்தல் வேண்டும்.

19 (ழ) வீதிப் போக்குவரத்து சேவைகள் சார்பில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களில் உள்ளீட்டு தரத்தை முன்னெடுப்பதற்காக வாகனங்களை புதுப்பித்து வழிநடத்தும் நிறுவனங்களை அதிகார சபையால் நடாத்திச் செல்லல். வழி நடத்தல், அச் சேவைகளை முன்னெடுப்பதற்கான கட்டணங்களை விதித்தல் மற்றும் நிபந்தனைகளை விதித்தல்.

27. பிரதான நியதிச்சட்டத்தில் 21 ஆம் சரத்தை நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக கீழக்குறிப்பிடப்படும் சரத்தை உட்படுத்தப்படும்

*பிரதான நியதிச் சட்டத்தில் 21 ஆவது சரத்தை திருத்தம் செய்தல்.*

"போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் குழுவினால் தேவையான உத்தியோகத்தர்கள் குழுவை தீர்மானிக்கப்படுவதோடு அதனை போக்குவரத்து விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களுடைய இணக்கத்தோடும் போக்குவரத்து விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அவர்களுடைய சிபாரிசு மற்றும் ஊவா மாகாண சபையின் முதன்மைச் செயலாளர் அவர்களுடைய சிபாரிசுகளுடன் ஊதியம் மற்றும் சேவையாளர் எண்ணிக்கை பற்றியஆணைக்குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

28. பிரதான நியதிச் சட்டத்தில் 22 (1) உப சரத்தை " மேலே 22 ஆம் பந்தி" எனும் சொற்களுக்கு பதிலாக மேலே 21 ஆம் பந்தி எனும் சொற்களை உட்படுத்தி அவ் உபசரத்து திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தில் 22 (1) உபசரத்தை திருத்தம் செய்தல்.*

29. பிரதான நியதிச் சட்டத்தில் 29 (அ) சரத்தில் 2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதம் (தண்டப்பணம்) அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது அவ்விரண்டில் ஒரு தண்டனைக்கு கட்டாயம் உட்படுதல் வேண்டும். எனும் சொற்களுக்கு பதிலாக "ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறையாத அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு சிறைத்தண்டனை அல்லது அவ்விரு வகையில் ஒரு தண்டனைக்கு உட்படுத்தல் வேண்டும்" எனும் சொற்களை உட்படுத்தி அப் பிரிவை திருத்தப்பட வேண்டும்.

*பிரதான நியதிச் சட்டத்தில் 29 (அ) பிரிவை திருத்தம் செய்தல்.*

பிரதான நியதிச் சட்டத்தில் 29 (ஆ) சரத்தை திருத்தம் செய்தல்.

30. பிரதான நியதிச் சட்டத்தில் 29 (ஆ) சரத்தில் "2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதம் (தண்டப்பணம் அல்லது 12 மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது இரண்டில் ஒன்றுக்கு உட்படுதல் வேண்டும் ஆகிய சொற்களுக்கு பதிலாக'' ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத அபராதம் அல்லது கடூழிய சிறைத் தண்டனைகளுடனான இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டிலொரு தண்டனைக்கு தாங்கள் இணைதல் வேண்டும் எனும் சொற்களை உட்படுத்தி திருத்தப்படுகின்றது.)

பிரதான நியதிச் சட்டத்தில் 32 ஆவது சரத்திற்கு இடமளித்தல்.

31. பிரதான நியதிச் சட்டத்தில் 32 ஆவது சரத்தை இத்தால் நீக்கப்படுவதோடு, அதற்கு பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் புதிய சரத்து உட்படுத்தப்படுகின்றது.

"அதிகார சபை நிதியத்திற்கான வரவுகள், அதிலிருந்து கட்டணங்களை செலுத்தல்கள் பற்றி பொதுவான மீளாய்வுகளை மேற்கொள்ளல், இந் நிதியை சரியான முறையில் நிர்வகித்தல் கணக்கிலிடுதல் என்பன பற்றிய பொறுப்புகளை பொது முகாமையாளரிடம் பொறுப்பாக்கப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தில் 33 ஆம் சரத்தை திருத்தம் செய்தல்.

32. பிரதான நியதிச் சட்டத்தில் 33 ஆவது சரத்தில் "பயணிகள் போக்குவரத்து சேவையை முறைப்படுத்தல்'' எனும் சொற்களுக்கு பதிலாக "வீதிப் போக்குவரத்து சேவைகளை முறைப்படுத்தல்'' எனும் சொற்களை உட்படுத்தி பேருந்து தரிப்பிடங்கள்'' எனும் சொற்களுக்கு பதிலாக "பேருந்து தரிப்பிடங்கள் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்கள்'' எனும் சொற்களை உட்படுத்தி அப் பிரிவு திருத்தப்படும்.

பிரதான நியதிச் சட்டத்தில் 36 ஆம் சரத்திற்கு இடமளித்தல்.

33. பிரதான நியதிச் சட்டத்தில் 36 ஆவது சரத்து இத்தால் நீக்கப்படுவதோடு அதற்கு பதிலாக கீழ் குறிப்பிடப்படும் புதிய உப சரத்து இத்தால் உட்படுத்தப்பட்டு அவ் உப பிரிவுகள் 36 (அ) மற்றும் 36 (ஆ) உப சரத்துக்கள் என அமுலில் இருத்தல் வேண்டும்.

"36 (ஆ) உள்ளக கணக்காய்வு திணைக்களத்தால் மாதாந்த கணக்கு அறிக்கைகளை பரிசோதிக்க வேண்டியதோடு அடுத்தமாத முடிவிற்கு முன்பு அதிகார சபையின் பொது முகாமையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

"36 (ஆ) நிதி ஆண்டு நிறைவு பெற்று அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்பு கடந்த ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளை கணக்காய்வாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நியதிச் சட்டத்தின் 37 ஆவது பதிவை இரத்துச் செய்தல்.

34. பிரதான நியதிச்சட்டத்தின் 37 ஆவது சரத்து இததால் இரத்துச் செய்யப்படுகின்றது.

பிரதான நியதிச் சட்டத்தின் 40 ஆவது சரத்துக்கு இடமளித்தல்.

35. பிரதான நியதிச் சட்டத்தில் 40 ஆவது பந்தி நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக புதிய உபசரத்து உட்படுத்தப்படுகின்றது.

"இக் கணக்கிற்காக அதிகார சபையின் பணிப்பாளர் குழு இணக்கத்தின் மீது அரச வங்கியொன்றில் ஒரு கணக்கை அல்லது சில கணக்குகளை முன்னெடுக்க முடியும்.

பிரதான நியதிச் சட்டத்தின் 45 ஆவது சரத்தை திருத்தலும், புதிய சரத்துக் களை இணைத்தலும்.

36. பிரதான நியதிச் சட்டத்தின் 45 ஆவது விளக்கமளித்தலின் கீழ், குறிப்பிடப்படும் சரத்துக்களை நீக்கி அதற்கு பதிலாக புதிய சரத்துக்கள் இணைக்கப்படும்.

"அதிகார சபை'' "மாகாண அதிகார சபை'' எனும் சொற்களில், ''ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை என கருதப்படுகின்றது'' எனும் சொற்களுக்கு பதிலாக "ஊவா மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை என கருதப்படும்'' எனும் சொற்களை உட்படுத்தப்படுகின்றது.

"அமைச்சர் அவர்கள் '' என "ஊவா மாகாண சபை அமைச்சரவையில் பயணிகள் போக்குவரத்து சேவைகள் விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களை குறிப்பிடுகின்றது'' எனும் சொற்களுக்கு பதிலாக "அமைச்சர்'' என ''ஊவா மாகாண சபை அமைச்சரவையின், போக்குவரத்து சேவைகள் விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்கள் கருதப்படுவர்'' எனும் சொற்கள் இணைக்கப்படுகின்றது.

அனுமதிப்பத்திரம் "பயணிகள் சேவை அனுமதி பத்திரம்" பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதி பத்திரம் " வீதி அனுமதி பத்திரம் " எனும் பெயர்களில் ஏதேனுமொரு பெயரில் அந் நியதிச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூல சட்டமொன்றில் கீழ் பல்வேறு கட்டணங்கள் மீது அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் ஊடாக பயணிகள் ஏற்றிச் செல்வதற்கு பேருந்து ஒன்றை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்க வெளியிடப்பட்ட வீதிப் போக்குவரத்து அதிகார சபை அனுமதிப்பத்திரமொன்றை கருதப்படுகின்றது எனும் சொற்களுக்கு பதிலாக ஏதேனுமொரு பெயரில் பிரதான நியதிச் சட்டம்

அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூல சட்டமொன்றில் கீழ் பல்வேறு கட்டணங்கள் மீது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளில் பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்வதற்கென வாகனமொன்றை பயன்படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டு வெளியிடப்பட்ட வீதிப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமொன்று கருதப்படுகின்றது எனும் சொற்களை உட்படுத்தப்படும்.

"போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள்" என ஊவா மாகாணத்திற்குள் பொருட்கள் அல்லது வேறு போக்குவரத்து சேவைகளுக்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் என கருதப்படுகின்றது.

"பயணிகள்" என பேருந்துக்கள், முச்சக்கர வண்டிகள், பூங்காக்களின் பார்வையாளர்கள் செல்லும் வண்டிகள், (Safary) அலுவலக சேவைகள், கைத்தொழில்கள், பாடசாலை சேவைகள் அல்லது வேறு வாகனங்களிலிருந்து கட்டணம் அறவிட்டு ஏற்றிச் செல்லும் நபர்கள் என கருதப்படுகின்றது.

''பொருட்கள்'' என பயணிகள் அல்லாத, வாடகை அடிப்படையிலும் கட்டணம் அறவிட்டு அடிப்படையிலும் ஏற்றிச் செல்லும் அனைத்து பொருட்களும் கருதப்படும்.

37. இந் நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி சொற்களுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் போது சிங்கள மொழி சொற்கள் அமுலில் இருக்கும்.

10-1237

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.